**"பயிலுனர் பட்டதாரிகளை பணிக்கமர்த்துதல் வேலைத்திட்டம்" இன் கீழ் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளை ஊவா மாகாண சபைக்கு உரிய சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்தல் - 2022**

ஊவா மாகாண சபையின் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல பாடசாலைகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்காக காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலக்கம் 21/2076/315/033-1 மற்றும் 2021.12.13 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானம் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளரின் இலக்கம் ED/02/29/21/A1/01/2020 மற்றும் 2021.12.31 ஆம் திகதி கடிதத்தின் பிரகாரம், அவ்வறிவித்தலின் இலக்கம் 02ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளுக்கு உரிய பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளிடமிருந்து மாத்திரம் விண்ணப்பபடிவம் கோரப்படுகின்றது. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2022.08.22 ஆகும்.

வெற்றிடமாக இருக்கும் விடய பட்டியல்

| தொ. இல. | பாடம் | பாட குறயீட்டு இலக்கம் | சிங்கள மொழி மூல வெற்றிடங்கள் | தமிழ் மொழி மூல வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| 06 – 11 தரம் வரையிலான வெற்றிட பாடங்கள் | | | | |
| 1 | பௌத்த மதம் | 1 | 13 | - |
| 2 | சிங்களம் | 2 | 43 | - |
| 3 | விஞ்ஞானம் | 3 | 49 | 05 |
| 4 | கணிதம் | 4 | 56 | 22 |
| 5 | புவியியல் | 5 | 56 | 15 |
| 6 | விவசாய உணவு தொழில்நுட்பம் | 6 | 46 | 14 |
| 7 | சித்திரம் | 7 | 90 | 13 |
| 8 | நடனம் | 8 | 29 | 16 |
| 9 | சங்கீதம் | 9 | 27 | 16 |
| 10 | தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம் | 10 | 108 | 28 |
| 11 | வரலாறு / அரசியல் விஞ்ஞானம் | 11 | 42 | 12 |
| 12 | வணிகம் மற்றும் கணக்கியல் | 12 | 39 | 12 |
| 13 | நடனம் மற்றும் நாடக கலை | 13 | 06 | - |
| 14 | இந்து தர்மம் | 14 | - | 08 |
| 15 | இஸ்லாம் | 15 | - | 03 |
| 16 | கிறிஸ்தவம் | 16 | - | 01 |
| 17 | தமிழ் மொழி | 17 | - | 06 |

**01. ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொதுவான தகைமைகள்:**

1.1 விண்ணப்பதாரர் பரம்பரையாகவோ அல்லது பதிவு செய்ததன் ஊடாகவோ இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

1.2 நன்னடத்தையுடன் மற்றும் நல்ல உடல் மற்றும் உள ஆரோக்கியத்துடன் கூடியவராக இருத்தல் வேண்டும்.

1.3 2020.12.30 திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் மற்றும் 35 வயதிற்கு அதிகமாகாமலும் இருத்தல் வேண்டும்.

**02. விண்ணப்பிக்கக் கூடிய பரிவுகள்:**

ஊவா மாகாண சபை சேவையில் உள்ள மற்றும் ஊவா மாகாணத்திற்குள் மத்திய அரசாங்க நிறுவனங்களில் சேவையில் உள்ள,

2.1. “பட்டதாரிகளை பணிக்கமர்த்தல வேலைத்திட்டம்” 2020 மற்றும் 2021 ன் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சகல பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகள்.

2.2. 2018 மற்றும் 2019 வருடங்களில் செயற்படுத்தப்பட்ட “பயிலுனர் பட்டதாரிகளுக்கு அரச நிறுவனங்களில் பயிற்சி ஒன்றினை பெற்றுக் கொடுத்தல்” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பட்டதாரிகள் / டிப்னோமாதாரிகள் பயிலுனர்களாக பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்து 2020.01.01 மற்றும் 2021.01.01 ஆம் திகதி முதல் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நிரந்தர நியமனத்தினை பெற்றுக்கொண்ட குழு.

2.3. மேலே குறிப்பிட்ட பிரிவுகளுக்குட்பட்ட நிரந்தர நியமனத்தினைப் பெற்றுக் கொண்டுள்ள பௌத்த பிக்குகள். (பௌத்த பிக்குகளை ஆசிரியர் சேவைக்கு நியமிக்கும் போது, இலக்கம் 19/◌◌ධ(66) மற்றும் 2019.12.18 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானம் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளரின் இலக்கம் ED/02/29/11/07/04 (කාව) மற்றும் 2020.02.19 ஆம் திகதி கடிதத்தின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்).

**03. கல்வி தகைமைகள்:**

3.1. இலக்கம் 1885/38 மற்றும் 2014.10.23 ஆம் திகதி இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமானக்குறிப்பின் 6 ஆம் பந்திக்கு ஏற்ப விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரர்களும் க.பொ.த. (சா/த) பரீட்ச்சையில் சிங்கள மொழியினை அல்லது தமிழ் மொழியினை ஒரு பாடமாக சித்தியடைந்திருத்தல்.

3.2. கற்பிக்கும் பணிக்காக ஏற்றுக்கொள்ப்பட்ட தனித்துவமான துறைகளுக்கான, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட (உள்நாட்டு / வெளிநாட்டு) பல்கலைக்கழகத்தினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பட்டம் / டிப்ளோமா பெற்றுக்கொண்டிருக்க வேண்டியதுடன், அப்பட்டம் / டிப்ளோமாவில் கற்றுள்ள பிரதான விடயங்களுக்கு ஏற்ப ஒவ்வொறு விடயங்களுக்காக தகைமைகள் பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும்.

**(கவனிக்குக: விண்ணப்பிக்கும் சகல பட்டதாரிகளும் / டிப்’ளோமாதாரிகளும் இலக்கம் 17/1597/748/027 மற்றும் 2017.08.29 ஆம் திகதி அமைச்சரவை தீர்மாகத்திற்கு ஏற்ப கற்பிப்பதற்கான பாடம், பட்டத்தில் கற்றுள்ள முழு பாட எண்ணிக்கையில் (1/3) பூரணமாக்கிய நபர்கள் மாத்திரமாக வேண்டும்).**

**04. சேவை நிபந்தனைகள்:**

4.1. இப்பதவி நிரந்தரமானது. பதவிக்கு உரித்தான ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு கீழ்படிதல் வேண்டும்.

4.2. முதலாவதாக நியமிக்கப்படும் பாடசாலையில் 05 வருடங்கள் கட்டாயமாக சேவை மேற்கொள்ள வேண்டியதோடு எந்தவொறு காரணத்திற்காகவும் இடமாற்றம் அல்லது சேவை இணைப்பினை பெறுவதற்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

4.3. 05 வருட சேவை காலத்தின் பின்னர் ஊவா மாகாண ஆசிரியர் இடமாற்ற கொள்கையின் பிரகாரம் சேவை தேவை அடிப்படையில் ஊவா மாகாணத்தின் வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுத்தருவதற்கு ஊவா மாகாண சபை கல்வி அமைச்சின் ஊடாக ஆராயப்படும்.

4.4. அரசாங்க நியமனத்தினை நிருவகிக்கும் பொதுவான நிபந்தனைகளுக்கும் 2014.10.23 ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 1885/38 னை உடைய அதி விசேட வர்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை பிரமாண குறிப்பில்

குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அப்பிரமாண குறிப்பில் மேற்கொள்டுள்ள அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு கீழ்படிதல் வேண்டும்.

4.5. பட்டதாரிகள் ஊவா மாகாண அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-1 (அ) தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதோடு, 2022.01.05 ஆம் திகதி பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016(iv) ன் GE-1-2016 – A சம்பள பிரிவின் கீழ் மாதாந்தம் ரூபா. 31,490/- 445x6-525x7-600x2-39,035/- மாதாந்த சம்பள அளவீட்டின் 14 வது சம்பள படியில் நிலைப்படுத்தப்படும்.

## 05. ஆட்சேர்ப்பு செய்யும் முறை:

5.1. விண்ணப்பப்படிவங்களை முன்வைத்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்காகவும் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஊடாக எழுத்து மூல பரீட்சை நடாத்தப்படும். ஒவ்வொறு விடயத்திலும் நிலவும் வெற்றிட எண்ணிக்கை மற்றும் கிடைக்கப்பெறும் எண்ணிக்கையின் அடிப்படையில் பரீட்சைக்கு அமர்த்துதல் அல்லது அமர்த்தாமை தொடர்பான தீர்மானத்தினை ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினை சார்ந்ததாகும். எழுத்து மூல பரீட்சையில் சித்தி எய்தும் விண்ணப்பதாரிகள் நேர்முக பரீட்சை மற்றும் கற்பித்தல் திறனை அளவிடுவதற்காக நடாத்தப்படும் பிரயோக பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு எழுத்து மூல பரீட்சை மற்றும் பிரயோக பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் வரிசைகிரமம் பிரகாரம் பாடசாலை அடிப்படையில் தகைமைவாய்தவர்கள் தேர்ந்தெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

5.2. எழுத்து மூல பரீட்சையில் சித்தி எய்தும் விண்ணப்பதாரிகள் ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் நேர்முக பரீட்சை மற்றும் கற்பித்தல் திறனை அளவிடுவதற்காக நடாத்தப்படும் பிரயோக பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு எழுத்து மூல பரீட்சை மற்றும் பிரயோக பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத்தொகையின் வரிசைகிரமம் பிரகாரம் பாடசாலை அடிப்படையில் தகைமைவாய்தவர்கள் தேர்ந்தெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

5.3. எழுத்து மூல பரீட்சையில் சித்தி எய்திய விண்ணப்பதாரர் ஒருவருக்கு பாடசாலை அடிப்படை முறையில் பாடநாலையொன்று கிடைக்கப்பெறவில்லை எனின் எழுத்து மூல பரீட்சை மற்றும் பிரயோக பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத்தொகையின் வரிசைகிரமம் பிரகாரம் பாடசாலை அடிப்படையில் எந்தவொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பம் செய்யாத வெற்றிட பாடசாலையொன்று ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆயைக்குழுவினால் பெற்றுத்தரப்படும்.

5.4. மேலே 5.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிட பாடசாலையொன்று பெற்றுத்தரும் போது ஒரே புள்ளிகளை பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் காணப்படின், விசேட பட்டம் பெற்றிருக்கும் விண்ணப்பதாரரிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5.5. பொது நேர்முக பரீட்சை:
இலங்கை ஆசிரியர் சேவை பிரமாண குறிப்பு மற்றும் அதற்கு இணங்கிதாக வெளியிடப்பட்ட வர்தமானி அறிவித்தல் அல்லது பத்திரிகை அறிவித்தல் அல்லது வலைதள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூரணப்படுத்தியுள்ளார்களா என பரிசீலனை செய்தல் மற்றும் உள மற்றும் உடல் தகுதி பரிசீலனை செய்யப்படும். நேர்முக பரீட்சையில் புள்ளிகள் ஏதேனும் பெற்றுத்தரபடமாட்டாது.

**5.6. பிரயோக பரீட்சை:**
ஆசிரியர் தொழிலில் முக்கியமானதான கற்றல் மற்றும் கற்பித்தல் நடவடிக்கை தொடர்பாக விண்ணப்பதாரரின் திறமை அளவிடப்படும். இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களை அடிப்படையாக கொண்டு இதற்காக புள்ளிகள் பெற்றுத்தரப்படும்.

5.7. அதேபோல இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் காணப்படுமாயின் அச்சந்தர்ப்பத்தில் ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் விடயங்களுக்கு உட்படும்.

## 06. விண்ணப்பிக்க வேண்டிய முறை:

6.1. இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப A4 அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தினை தயாரித்தல் வேண்டும். விண்ணப்பப்படித்தில் ஒவ்வொறு தலைப்புகளுக்கும் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றி தெளிவாக தத்தமது கையெழுத்தினாலேயே நிரப்புதல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 07 வரையிலான பிரிவுகள் முதல் பக்கத்திலும் ஏனையன இரண்டாம் பக்கத்திலும் காணப்படும் விதத்தில் விண்ணப்பப்படிவத்தினை தயார்செய்ய வேண்டும்.

6.2. பூரணமாக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2022.08.22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு **“செயலாளர், ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு, இலக்கம் 14/4, பீலிபொதகமை வீதி, பிங்கராவை, பதுளை”** என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றது தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தினை இட்டு அனுப்பும் கடித உரையின் இடது மேல் மூளையில் **“பயிலுனர் பட்டதாரிகளை பணிக்கமர்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்தல்”** எனவும் மற்றும் தாங்கள் விண்ணப்பிக்கும் விடயம் மற்றும் விடய இலக்கத்தினை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

6.3. ஊவா மாகாண அரசாங்க சேவையில் பணிப்புரியும் மற்றும் ஊவா மாகாணத்திற்குள் மத்திய அரவாங்க நிறுவனங்களில் பணிப்புரியும் விண்ணப்தாரிகள் விண்ணப்பப்படிவங்களை தமது திணைக்கள தலைவரின் ஊடாக முன்வைத்தல் வேண்டும்.

6.4. விண்ணபதாரர் ஒருவருக்கு ஒரு விடயத்திற்காக மாத்திரம் விண்ண்பிக்க இயலுவதோடு விண்ணப்பிக்கும் விடயத்தை பின்னர் மாற்றுவதற்கு இடம்மளிக்கப்படமாட்டாது. இது தொடர்பில் முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. உப ஆவண இலக்கம் 01 றிற்கு ஏற்ப விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் பாட இலக்கம், விண்ணபபடிவத்தின் குறித்த இடத்தில் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

6.5. விண்ணபதாரர் ஒருவருக்கு 3 பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்க முடியுவதோடு விண்ணப்பிக்கும் பாடசாலையினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. இது தொடர்பில் முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. www.psc.up.gov.lk வலைத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உப ஆவண இலக்கம் 01 ன் பாடசாலை வெற்றிட ஆவணத்திற்கு ஏற்ப விண்ணப்பிக்கும் பாடசாலையின் தொடர் இலக்கம், வலயம் மற்றும் பாடசாலையின் பெயர் என்பவற்றை விண்ணப்பப்படிவத்தின் குறித்த இடத்தில் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

6.6. ஒரு விண்ணப்தாரரினால் ஒரு விண்ணப்பப்படிவம் மாத்திரமே முன்வைக்க முடியும். ஆட்சேர்ப்பு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவதோடு, ஊவா மாகாணத்தில் உள்ள எந்தவொறு பாடசாலையிலும் கடமை புரிய விண்ணபதாரர் ஒப்புக்கொள்ள வேண்டும்.

6.7. குறித்த மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப அமையாத, பரீட்சை மற்றும் நிருவாக கட்டணம் செலுத்தப்படாத, தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணணப்பப்படிவங்கள், பூரணமாக தகவல்களை வழங்கியிறாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் தேவையான தகைமைகளை கொண்டிறாத விண்ணப்பப்படிவங்கள் எந்தவொறு அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும். முன்வைக்கும் விண்ணப்பப்படிவத்தை வலைத்தளத்தில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்படிவத்திற்கு ஏற்ப முன்வைத்தல் விண்ணபதாரியின் பொறுப்பாகும். விண்ணப்பப்படிவம் தபாலில் காணாமல் போகுதல் மற்றும் தாமதமாகுதல் தொடர்பில் முன்வைக்கப்படும் எந்தவொறு

முறையீடுகளும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. முன்வைக்கும் விண்ணப்பப்படிவத்தில் நிழல்பட பிரதி ஒன்றினை தம்மிடம் வைத்திருப்பது நன்மை பயப்பதாகும்.

07. **கையொப்பத்தினை சான்றுப்படுத்துதல்:**

விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபரினால் / பிரிவின் கிராம ஆலுவலரினால் / சமாதான நீதவான் ஒருவரினால் / சத்திய பிரமாண ஆணையாளரினால் / பொது நொதாரிஸ் / முப்படையின் அதிகாரம் உள்ள அலுவலர் / வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியிலுள்ள பொலிஸ் சேவையின் அலுவலர்/ அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவியினை வகிக்கும் ரூபா. 47,615/- அல்லது அதற்கு கூடுதலான மாதாந்த ஒன்றினைந்த சம்பளத்தினை பெறும் நிரந்தர நிறைவேற்று மட்ட அலுவலரினால் சான்றுப்படுத்தப்பட்டிருதல் வேண்டும்.

**08. பரீட்சை மற்றும் நிருவாக கட்டணம்:**

பரீட்சை கட்டணம் மற்றும் நிருவாக செலவீனம் ரூபா. 1250/- ஆகும். இத்தொகையை **ஊவா மாகாண பிரதான செயலாளரின் வருமான தலைப்பு 20.03.02.13 ற்கு வரவு வைக்கக்கூடியவாறு ஊவா மாகாணத்தில் காணப்படும் எந்தவொறு பிரதேச செயலாளர் காரியாலயத்திலாவது** பணமாக செலுத்தி விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை அதன் ஒரு விளிம்பை விண்ணபத்தின் குறித்த இடத்தில் கழறாதவாறு நன்றாக ஒட்ட வேண்டும். எதிர்கால தேவை கருதி இதன் நிழல்பட பிரதியினை தம்மிடம் வைத்திருப்பது பயன்தக்கதாகும். ஊவா மாகாணத்தின் பிரதேச செயலாளர் காரியாலயமொன்றில் பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை தவிர வேறு நிறுவனத்தில் பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு அல்லது காசுக் கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாததுடன், அவ்விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொறு காரணத்திற்காகவும் திருப்பித்தரபடவோ அல்லது வேறு பரீட்சைக்கான கட்டணமாக மாற்றித்தரபடவோமாட்டாது.

**09. பரீட்சை நடைமுறை மற்றும் போட்டிப் பரீட்சையின் விடய ஆய்வு:**

9.1. வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் தீர்மானத்தின் அடிப்படையில் அறிவித்தலின் வயது வரையறையினுள், விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் குறித்த பரீட்சை கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தை செலுத்தியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஊவா மாகாண சபை ஊடாக பரீட்சை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படும். தனது அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத நபர் ஒருவர் இருப்பின் அது தொடர்பில் ஊவா மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவில் வினவல் செய்ய முடியும். அவ்வாறு வினவல் போது விண்ணப்தாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர் தேசிய அடையாள அட்டையின் இலக்கம் மற்றும் விலாசத்தினை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் கோரப்படும் ஏதேனும் தகவல்களை சான்றுப்படுத்துவதற்காக தன்னிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி / விண்ணப்பப்படிவத்தினை பதிவு தபால் செய்யும் போது பதிவு செய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றை தயாராக வைத்திருத்தல் பயன்பெறதக்கதாகும்.

9.2. போட்டிப் பரீட்சை பதுளை மற்றும் மொணராகலை நகரங்களில் மாத்திரம் நடாத்தப்படும்.

9.3. விதிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சை அபேட்சகர்கள் உட்படிதல் வேண்டும். அச்சட்டத்திட்டங்களை மீறினால் ஊவா மாகாண அரசாய்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அந்நபர் உள்ளாக்கப்படுவர்.

9.4. பரீட்சை தினத்தன்று அபேட்சகரின் ஆள் அடையாளத்தினை சான்றுபடுத்துவதற்காக ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை, செல்லுப்படியாகக்கூடிய கடவுச்சீட்டு அல்லது செல்லுப்படியாகக்கூடிய சாரதி அனுமதிப்பத்திரம் பரீட்சை மண்டப பொறுப்பதிகாரியிடம் முன்வைக்க வேண்டும். இவ்வாவணங்களை தவிர வேறு ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9.5. போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் விண்ணப்பதாரி குறித்த பதவிக்கான தகைமைகளை கொண்டுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சையின் போது தேவையான தகைமைகளை பூரணப்படுத்தியிறாமை தெரிய வந்தால் அவ்விண்ணபதாரி நியமனத்தினை பெறுவதற்கு தகுதியற்றவராக கருதப்படுவார்.

9.6. இப்போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலத்தில் நடாத்தப்படும். அபேட்சகர் ஒருவர் சகல பரீட்சைகளுக்கும் ஒரே மொழியிலேயே தோற்ற வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பித்ததன் பின்னர் மொழி மூலத்தினை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

9.7. எழுத்து மூல போட்டிப் பரீட்சையானது பல் தேர்வு வினா மற்றும் குறுகிய பதிலுடன் கூடியதாக வினாப்பத்திரம் 02 உடன் கூடியதாக காணப்படும். சகல அபேட்சகர்களும் வினாப்பத்திரம் இரண்டிற்கும் (02) தோற்ற வேண்டும்.

**01. நுண்ணறிவு - காலம் 01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்**

அபேட்சகரிடம் காணப்படும் ஆசிரியர் தொழிலிற்கான திறன், தர்க்கரீதியான அறிவை அளவிடுவதனை நோக்கமாக கொண்டு இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். இவ்வினாத்தாள் பல் தேர்வு வினா மற்றும் குறுகிய பதில் வினாக்கள் 50 ன் கூடியதாகும். அவ்வினாக்கள் சகலவற்றிற்கும் விடையளிக்க வேண்டும்.

**02. பொது அறிவு - காலம் 01 மணித்தியாலம் - 100 புள்ளிகள்**

ஆசிரியர் தொழிலில் தொடர்பான பொது அறிவு, தேசிய ரீதியில் இடம்பெற்றிருக்கும் மற்றும் இடம்பெறும் கல்வி முன்னேற்றம் தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வி புத்தாக்கம் தொடர்பான பொது அறிவை பரிசீலனை செய்யும் பல் தேர்வு வினா மற்றும் குறுகிய பதில் வினாக்களுடன் கூடியதாகும். அவ்வினாக்கள் சகலவற்றிற்கும் விடையளிக்க வேண்டும்.

போட்டிப் பரீட்சையில் சித்தியெய்துவதற்காக ஒவ்வொறு வினாப்பத்திரத்திற்கும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளை அல்லது அதற்கு கூடுதலான புள்ளிகளை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

9.8. **பிரயோக பரீட்சை:** காலம் - நிமிடங்கள் 5 க்கு குறையாத காலம் வழங்கப்படும்
- உயர்ந்தப்பட்ச புள்ளிகள் 25

விண்ணபதாரரினால் நியமனம் பெற்றுக்கொள்ளுவதற்கு எதிர்பார்க்கும் பாடம் தொடர்புாக கண்டறியப்பட்ட தலைப்பின் கீழ் சமர்ப்பிப்பினை மேற்கொள்ள வேண்டும். இதற்காக கீழே தரப்பட்டுள்ள அளவுகோல்களுக்கு ஏற்ப புள்ளிகள் வழங்கப்படும். இப்பரீட்சை ஊவா மாகாண சபையினால் நியமிக்கப்படும் பரீட்சை சபையினால் மேற்கொள்ளப்படும்.

| தொடர் இலக்கம் | பிரயோக பரீட்சையில் புள்ளிகள் பெற்றுதரப்படும் அளவுக்கோல்கள் | அளவுக்கோல்களின் நோக்கம் | உயர்ந்தப்பட்ச புள்ளிகள் | தேர்ச்சிப் பெறுவதற்கு தேவையான குறைந்தப்பட்ச புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | நோக்கம் மற்றும் அணுகல் தன்மை | வெற்றிகரமாக பாடத்தின் நோக்கத்தினை விளங்கப்படுத்துதல் மற்றும் பாடத்தற்கு அணுகும் திறமையினை மதிப்பிடுதல் | 05 | 02 |
| 02 | ஆளுமை மற்றும் குரல் நிருவாகம் | ஆசிரியராக நல்ல ஆளுமையுடன் இருத்தல் மற்றும் கற்பிக்கும் போது சரியான முறையில் குரலை நிருவகித்தல் திறனை மதிப்பிடுதல் | 05 | 02 |
| 03 | தொடர்பாடல் தெளிவு | கற்றல் / கற்பித்தல் செயற்பாடுகளில் தேவையான விடயங்களை உற்பத்தித்திறன் மிக்கதாக தொடர்பாடல் செய்வதற்கான திறனை மதிப்பிடுதல். | 05 | 02 |
| 04 | நேர முகாமைத்துவம் | பெற்றுத்தரப்படும் கால எல்லைக்குள் நோக்கத்தை அடைவதற்கான திறமையினை மதிப்பிடுதல். | 05 | 02 |
| 05 | சமர்ப்பித்தல் முறையில் நுட்பங்களின் பாவனை | நோக்கத்தினை அடைவதற்காக சமர்ப்பிப்பதற்கான நுட்ப முறையினை சரியாக பயன்படுத்தும் திறனை மதிப்பிடுதல். | 05 | 02 |
| **மொத்த புள்ளிகள் எண்ணிக்கை** | | | **25** | **10** |

- பிரயோக பரீட்சையில் தேர்ச்சி அடைவதற்காக ஒவ்வொறு அளவுகோலிற்காக குறைந்தபட்சம் 2 புள்ளிகள் வீதம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**10. நேர்முக பரீட்சைக்காக குறித்த தினத்தன்று பங்குபற்றாத விண்ணப்பதாரர்கள் எந்தவொறு வகையிலும் மீண்டும் கருத்தில் கொள்ளப்படமாட்டார்கள்.**

**11. பொய்யான தகவல்களை வழங்குதல்:**

இப்பரீட்சையில் தோற்றுவதற்காக பரீட்சார்த்தி ஒருவருக்கு தகைமை இல்லை என தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைப்பெறும் போதோ அல்லது பரீட்சைக்கு பின்னரோ அல்லது எந்தவொறு சந்தர்பத்திலோ அவரின் பரீட்சை உரிமை இரத்து செய்யப்படக்கூடும். சேவைக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னர் விண்ணப்பதாரர் வழங்கிய யாதேனும் தகவல் பொய்யானதாக அல்லது வேண்டுமென்றே பொய்யான தகவல்களை வழங்கியுள்ளார் என தெரியவந்தால் அல்லது சரியான தகவல்களை வேண்டுமென்றே மறைத்துள்ளார் என தெரியவந்தால் அவரின் சேவையானது முடிவுறுத்தப்படும்.

12. இப்பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல் / ஆட்சேர்ப்பு செய்யாமலிருத்தல் அல்லது வெற்றிட எண்ணிக்கையினது ஒரு பகுதியினை நிரப்புதல் அல்லது வெற்றிட எண்ணிக்கை தொடர்ப்பில் அல்லது இது தொடர்பான ஏதேனும் விடயம் தொடர்ப்பில் இறுதித் தீர்மானமானது ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினாலேயே மேற்கொள்ளப்படும். அதேபோல இவ்வறிவித்தலின் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத ஏதேனும் விடயங்கள் காணப்படின் அது தொடர்ப்பில் விவரித்தல்/தீர்மானம் எடுத்தல் ஊவா மாகாண ஆளுநரின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு ஊடாக மேற்கொள்ளப்படும்.

13. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலின் மொழிகளுக்கு இடையில் பொருத்தமின்மை காணப்படுமாயின் அல்லது முரண்பாடு இருப்பதாக தெரிய வந்தால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலிற்கு ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(காமினி மஹிந்தபால ஜோபியஸ்)
செயலாளர்
ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு

2022.08.01 ம் திகதி

ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு
இல. 14/4, பீலிபொதகமை வீதி,
பிங்கராவை, பதுளை.